33—

மாடப்பள்ளியில் பருத்தி நூற்பு ஆலை அமைத்தல்

47985-திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள மாடப்பள்ளியில் பருத்தி நூற்பு ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆவன செய்யாது.

(ஆ) இல்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடப்பள்ளி, வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆண்டொன்றுக்கு பலகோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தி விற்பனையாகிறது. பல வெளிமாநிலங்களிலிருந்தும், நமது மாநிலத்திலுள்ள கோவை, திருப்பூர் முதலிய ஊர்களிலிருந்தும் இங்கே வந்து பருத்தியை வாங்குகிறார்கள். மற்ற இடங்களிலே விளையும் பருத்தியைக் காட்டிலும் முதல் தரமான பருத்தி, என்னுடைய தொகுதியான திருப்பத்தூரில் விளைகிறது. அதனால், வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். என் தொகுதி, தொழில்துறையில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால், அதனால் இங்கே விளையும் பருத்தியைக் கொண்டு கூட்டுறவு நூற்பாலை ஒன்றை அமைக்கும்போது, இப்பகுதிவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுவதற்கு வசதியாக இருக்கும். அதனால், அங்கே கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏறக்குறைய 18 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை நஷ்டத்திலே இயங்கிக் கெண்டிருக்கின்றன. அவற்றை இலாபத்திலே கொண்டு வருவதற்கு மட்டுமே

1995 நவம்பர் 7]

இப்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, புதிதாக ஒரு நூற்பாலை துவங்குவதற்குரிய எண்ணம் அரசுக்கு இல்லை. ஆனாலுங்கூட, வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டத்திலும் 8 நூற்பாலைகள் இருக்கின்றன. அவற்றிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. தனியார் நூற்பாலைகள் 7 இருக்கின்றன. அதுபோல, தனியார் யாராவது அமைக்க முன்வந்தால், அரசு தேவையான உதவியைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

34—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை இயங்கச் செய்தல்

***19346*-திருமதி இரா. பாண்டியம்மாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி சரியாக இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கல்லூரியை முறையாக இயங்கச் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

முற்பகல் 10-45

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கல்லூரி தற்போது முறையாக இயங்கி வருகிறது.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டித் தொகுதி பின்தங்கிய தொகுதி; பிற்பட்டோர் சமுதாய மக்கள் வாழ்கின்ற தொகுதி. எங்கள் தொகுதியில் ஒரே ஒரு கல்லூரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் இயங்கி வருகிறது. இந்தக் கல்லூரியில் இப்போது நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை என்று புகார்கள் சொல்லப்படுகின்றன. அந்தக் கல்லூரியில் இருக்கும் முதல்வர் அவர்களும் செயலாளர் அவர்களும் சரிவர செயல்படாமல் இருக்கிறார்கள்